முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை, தலைமைச் செயலகத்தில் நபார்டு வங்கியின் தலைமைப் பொது மேலாளர் ஆர்.ஆனந்த் சந்தித்துப் பேசினார். தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நபார்டு வங்கியின் துணைப் பொது மேலாளர் ஜி.சந்தானம், உதவிப் பொது மேலாளர் எம்.சுந்தரரமான் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

* வாகனம் நிறுத்துமிடம் * பல்வகை உணவுக்கூடம்
* உடற்பயிற்சிக்கூடம் * கலையரங்கம் *தடையற்ற மின்வசதி

ரூ.32½ கோடி செலவில்

தூத்துக்குடியில் மினி டைடல் பூங்கா: நாளை ஸ்டாலின் திறந்து வைக்கிறார்

புதுமைப் பெண் திட்ட விரிவாக்கம்: 75 ஆயிரம் மாணவிகளுக்கு தலா ரூ.1000 உதவித்திட்டத்தை துவக்குகிறார்

சென்னை, டிச.28–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தூத்துக்குடியில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்த 75,028 மாணவியர்க்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கிடும் புதுமைப் பெண் திட்டத்தின் விரிவாக்கப் பணிகளை வரும் 30–ந் தேதி திங்கட்கிழமை தொடங்கி வைக்கிறார். நாளை (29–ந் தேதி) 63 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் 4 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள மினி டைடல் பூங்காவை திறந்து வைக்கிறார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் கல்வி வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருவதுடன், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் வகையில் புதிய தொழில்களைத் தொடங்குவதற்காக இந்தியாவில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளுக்கும் சுற்றுப்பயணம் சென்று தொழில் முதலீட்டாளர்களைச் சந்தித்துப் புதிய தொழில்களுக்கான முதலீடுகளை ஈர்த்து வருகிறார்.

இதுவரை ஏறத்தாழ 10 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இதன் பயனாக, ஏறத்தாழ 31 லட்சம் இளைஞர்கள் புதிய வேலை வாய்ப்புகள் பெறும் நிலை உருவாகியுள்ளது. மேலும், கடந்த 40 மாதங்களில் பல்வேறு புதிய தொழில்கள் தொடங்கப்பட்டு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். தகவல் தொழில் நுட்பத் துறை வளர்ச்சியிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து தீவிர கவனம் செலுத்தி வருகிறார்.

தகவல் தொழில் நுட்பத் தொழில்கள் தமிழ்நாட்டில் செழித்து வளர்ந்துள்ளன. தகவல் தொழில் நுட்பத்திற்கு புதிய கொள்கையை முதன்முதல் வகுத்த மாநிலம் தமிழ்நாடு.

கலைஞர் தகவல் தொழில் நுட்பத் தொழில்களைப் பெருக்கும் நோக்கத்துடன் இந்தியாவிலேயே முதன்முதலாக சென்னையில் உருவாக்கப்பட்ட மிகப் பெரிய டைடல் பூங்காவினை கடந்த 2000–ம் ஆண்டு ஜூலை 4–ம் நாள், அன்றைய பிரதமர் வாஜ்பாய்யை அழைத்துத் திறந்து வைத்தார்.

21 தளங்களுடன் மாபெரும் டைடல் பூங்கா

இந்தத் தகவல் தொழில்நுட்பத் தொழில்கள் தமிழ்நாடு முழுவதும் பரவலாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்கிற உயரிய நோக்கத்துடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் விழுப்புரம், திருப்பூர், வேலூர், தஞ்சாவூர், தூத்துக்குடி, சேலம், காரைக்குடி ஆகிய இடங்களில் மினி டைடல் பூங்காக்களையும், மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் டைடல் பூங்காக்களையும் உருவாக்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றுள் விழுப்புரம், தஞ்சாவூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள மினி டைடல் பூங்காக்கள் முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கோவை மாவட்டம், விளாங்குறிச்சியில் அமைக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்கா, திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராமில் தமிழ்நாடு அரசுக் கட்டடங்களில் மிக அளவில் 21 தளங்களுடன் கூடிய மாபெரும் டைடல் பூங்கா ஆகியவற்றை முதலமைச்சரால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவற்றைத் தொடர்ந்து, தூத்துக்குடியில் 63 ஆயிரம் சதுர அடி பரப்பில் தரைத் தளம் மற்றும் 4 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள மினி டைடல் பூங்கா பூங்காவினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை (29–ந் தேதி) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.50 மணிக்கு திறந்து வைக்கிறார். இப்பூங்காவானது, வாகனம் நிறுத்துமிடம், பல்வகை உணவுக்கூடம், உடற்பயிற்சிக்கூடம், கலையரங்கம், தடையற்ற மின் வசதி ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது.

ஒரு மைல்கல் திட்டம்

ஏறத்தாழ, 32 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இந்த மினி டைடல் பூங்கா ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கக் கூடியதாக அமைந்துள்ளது.

தமிழ்நாட்டின் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியில் குறிப்பாக தூத்துக்குடியில் உருவாக்கப்பட்டுள்ள இந்த மினி டைடல் பூங்கா மேலும் ஒரு மைல் கல் திட்டமாக வடிவெடுத்துள்ளது. முதலமைச்சர் ஸ்டாலினின் தூத்துக்குடி பயணம் புதுமைப் பெண் திட்டம் விரிவாக்கம் தொடக்கம், மினி டைடல் பூங்கா திறப்பு ஆகிய நிகழ்ச்சிகள் வாயிலாக தூத்துக்குடி மாவட்ட மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்து வரவேற்பைப் பெற்றுள்ளது.

ரூ.104 கோடி மதிப்பீட்டில்

சென்னை தீவுத்திடலில் 40 அரங்கம், 400 கார், பைக் நிறுத்தும் இடம், நவீன வசதிகளுடன் கட்டிடம்

பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு

சென்னை, டிச.28–

சென்னை தீவுத்திடலில் ரூ.104 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேரில் ஆய்வு செய்தார்.

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் முடிவு பெறவுள்ள பணிகள் வரும் 2025 பிப்ரவரி மாதம் முதல் படிப்படியாக மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும் என்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இன்று சென்னை, காமராஜர் சாலை, தீவுத்திடலில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சுமார் 3.10 ஏக்கர் நிலப்பரப்பில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.104 கோடி மதிப்பீட்டில் தரை தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் இயற்கை வனப்புடன் கூடிய நவீன நகர்ப்புற பொது சதுக்கம், கண்காட்சி அரங்கங்கள், திறந்தவெளி திரையரங்கம், உணவகங்கள் போன்ற நவீன நகர்ப்புற வசதிகள் கொண்ட கட்டடம் கட்டும் இடத்தை இந்து அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

நவீன நகர்ப்புற வசதிகள் கொண்ட கட்டடம் அமைக்கும் பணியினை அடிக்கல் நாட்டி முதல்வர் தொடங்கி வைத்தார்.

இன்று இவ்விடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகளை ஆய்வு மேற்கொண்டோம். சென்னை தீவுத்திடலில் 1.60 லட்ச சதுர அடி பரப்பளவில் 40 கடைகள், 200 இருசக்கர வாகனங்கள் மற்றும் 200 நான்கு சக்கர வாகனங்கள் என வாகனங்கள் நிறுத்துவதற்கான இட வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட உள்ளது. இதே போல் இந்த கட்டிடத்தில் 90 கழிவறைகள் கட்டப்பட உள்ளது. குறிப்பாக திருநங்கைகளுக்கென தனி கழிப்பறை வசதியும் இந்த கட்டிடத்தில் ஏற்படுத்தப்பட உள்ளது. இந்த கட்டுமான பணிகள் நிறைவுபெறும் பொழுது 40 அரங்குகள் சுமார் 1000 சதுர அடி நிலப்பரப்பில் அமைய உள்ளது.

அரங்க முதல் தளத்தில் 20 ஆயிரம் சதுர அடிக்கு கண்காட்சியகத்தின் அரங்கமும், 20 ஆயிரம் சதுர அடியில் உணவகமும் அமைய உள்ளது. கட்டிடத்தின் முகப்பு 450 அடி உயரத்தில் மிகவும் தொன்மையான கலை நுட்பங்கள் கொண்டு அமைக்கப்பட உள்ளது.

வடசென்னை வளர்ச்சித் திட்டப் பணிகளை தினமும் களஆய்வு மேற்கொண்டு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள். இந்த பணிகள் முழு உச்சியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறிப்பாக 2025 பிப்ரவரி மாதம் முடிவு பெற உள்ள பணிகள் படிப்படியாக மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது. 6,000 கோடி மதிப்பிலான தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளை சார்ந்த பணிகள் ஆனது வடசென்னை வளர்ச்சி திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

இந்த ஆய்வின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர் ஸ்ரீராமுலு, தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர் நா.பாலமுருகன், மண்டல அலுவலர்கள் பரிதா பானு, ஏ.எஸ்.முருகன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அண்ணாமலையின் பருத்தி சாட்டை

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை சட்டையால் அடித்துக் கொண்டது தொடர்பான கேள்விக்கு அமைச்சர் அளித்த பதிலில், பாஜக மாநில தலைவர் அண்ணாமலை சட்டையால் அடித்துக் கொண்ட விவகாரம் பொறுத்தவரையில் அவர் தேங்காய் நாரினாலும், தோலினாலும் செய்த சாட்டையில் அடித்துக் கொள்ளவில்லை. மாறாக பருத்தி பஞ்சினால் தயாரிக்கப்பட்ட சாட்டையினை கொண்டு அடித்துக் கொண்டுள்ளார்.

அண்ணாமலை பஞ்சால் ஆன சாட்டையால் அடித்துக் கொண்ட விவகாரம் என்பது வெறும் விளம்பரத்திற்காக மட்டுமே செய்த ஒன்று தான். அண்ணாமலை இந்த ஜென்மத்தில் மட்டுமல்ல அடுத்த ஜென்மத்திலும் அவர் நிச்சயமாக காலில் செருப்பு அணிய மாட்டார். ஏனெனில் இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் திராவிட மாடல் ஆட்சி தான் தொடரும் என்று கூறினார்.

பாதிக்கப்பட்ட மாணவிக்கு ரூ.25 லட்சம் இழப்பீடு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டவட்டமாக தெரிவித்தார்.

3 பெண் ஐபிஎஸ் அதிகாரிகள் விசாரணை

மனுதாரர்கள் தரப்பில், கைது செய்யப்பட்டுள்ள நபர் துணை முதல்வர் உடனும், அமைச்சருடனும் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை சுட்டிக்காட்டி அவர் திமுக நிர்வாகி என்று வாதிடப்பட்டது.

இந்த வாதத்தை ஏற்க மறுத்த நீதிபதிகள், ஒரு நிகழ்வுக்கு செல்லும் போது புகைப்படம் எடுத்துக் கொண்டால் அதை வைத்து எப்படி முடிவுக்கு வர முடியும் என்று கேள்வி எழுப்பிய நீதிபதிகள், மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கையும், முதல் தகவல் அறிக்கை வெளியானது குறித்த வழக்கையும் விசாரிக்க மூன்று பெண் ஐபிஎஸ் அதிகாரிகள் அடங்கிய சிறப்பு புலனாய்வு குழுவை நியமித்து உத்தரவிட்டனர்.

ரூ.25 லட்சம் இடைக்கால இழப்பீடு

மேலும் மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் சிபிஐ விசாரணை கோரிக்கையை நிராகரித்து நீதிபதி உத்தரவிட்டார். எப்ஆர்ஐ வெளியானதால் பாதிக்கப்பட்ட மாணவிக்கு இடைக்கால இழப்பீடாக ரூ. 25 லட்சம் வழங்க வேண்டும். மாணவியிடம் எந்த கல்வி கட்டணமும் இனி அண்ணா பல்கலைக்கழகம் வசூலிக்க கூடாது. உளவியல் சிகிச்சை அளிக்க வேண்டும். கல்வியை தொடர அனுமதிக்க வேண்டும். மாணவிக்கும் பெற்றோருக்கும் பாதுகாப்பு வழங்க டிஜிபி உத்தரவிட வேண்டும் என்றும் விசாரணை ஆரம்பகட்ட நிலையில் உள்ள போது, அரசு அனுமதி இன்றி செய்தியாளர் சந்திப்பை நடத்தி, வழக்கு குறித்த முக்கிய தகவல்களை பகிர்ந்த காவல்துறை ஆணையருக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம் என்றும் கூறினர்.

இந்த வழக்கின் விசாரணையை கண்காணிக்க சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு தானாக முன்வந்து குழு அமைக்க ஒப்புக்கொண்டது. அண்ணாநகர் துணை ஆணையர் சினேகபிரியா, ஆவடி துணை ஆணையர் ஐமான் ஜமால், சேலம் துணை ஆணையர் பிருந்தா ஆகியோர் இந்த குழுவில் இடம் பெற்றுள்ளனர். பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பை மேம்படுத்த கூடிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அண்ணா பல்கலைக்கழகத்திற்கு உத்தரவிட்ட நீதிபதிகள், மாணவி மற்றும் குடும்பத்தினருக்கு உரிய பாதுகாப்பை வழங்க தமிழக டிஜிபிக்கு உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தனர்.

முழு அரசு மரியாதையுடன், மன்மோகன் சிங் உடல் தகனம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்டோரும் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

தலைவர்களின் இறுதி மரியாதையை அடுத்து மன்மோகன் சிங்கின் உடல் மீது போர்த்தப்பட்டிருந்த தேசிய கொடி அகற்றப்பட்டு அவரது மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து அவரது உடல் தகன மேடைக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு, சந்தனக் கட்டைகள் மீது மன்மோகன் சிங்கின் உடல் வைக்கப்பட்டு, சீக்கிய மத முறைப்படி மந்திரங்கள் ஓதப்பட்டு இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டன. இதில் மன்மோகன் சிங்கின் மனைவி குர்ஷரன் கவுர், மகள்கள், நெருங்கிய உறவினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சடங்குகளைச் செய்தனர். பின்னர் மன்மோகன் சிங் உடலைச் சுற்றி கட்டைகள் வைக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக பகல் 1 மணி அளவில் 21 குண்டுகள் முழுங்க முழு ராணுவ மரியாதை அளிக்கப்பட்டு, மன்மோகன் சிங்கின் உடல் எரியூட்டப்பட்டது.

மன்மோகன் சிங் இறுதி ஊர்வலத்தை முன்னிட்டு டெல்லியில் மத்திய அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்களுக்கு அரை நாள் விடுப்பு விடப்பட்டிருந்தது. மத்திய அரசு சார்பில் ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்த அனைத்து அரசு விழாக்களும் ஒரு வாரத்துக்கு ரத்து செய்யப்பட்டுள்ளது.

பொது அறிவிப்பு

நொடிந்த நிலை மற்றும் திவால் நிலை சட்டம் 2016, பிரிவு 102-ன் கீழ்
மற்றும் மாண்புமிகு NCLT, சென்னை பெஞ்ச் II இன் வழிகாட்டுதலின் கீழ்

"Mrs.S.கமலம் கடனீந்தோரின் கவனத்திற்கு"
[அக்வா டிசைன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்-ன் தனிப்பட்ட ஜாமீன்தாரர்)
(CIN : U41000TN2002PTC050091)]

வ. எண்.	முக்கிய விபரங்கள்	
1.	கடன் பெற்ற தனிப்பட்ட ஜாமீன்தாரர் பெயர்	Mrs.S.கமலம்
2.	தனிப்பட்ட ஜாமீன்தாரரின் முகவரி	C/o Shri. பிரபாகரன், எண்.13/1A, ஜெயந்தி நகர் விரிவு, கொளத்தூர் அஞ்சல், சென்னை-600 099, தமிழ்நாடு
3.	விண்ணப்பத்தினை ஒப்புக்கொள்ளும் உத்தரவின் விவரங்கள்	ஆர்டர் எண். CP (IB)/185/2021, 26.12.2024 அன்று பாரத ஸ்டேட் பாங்கு Vs Mrs.S.கமலம் U/s 95 (1) இன் I & B குறியீடு, 2016-ன் கீழ் வழங்கப்பட்டது மற்றும் ஆர்டர் தேதி 20.12.2024
4.	திவால் தீர்வு நடைமுறை தொடங்கும் தேதி	20.12.2024 (26.12.2024 அன்று பெறப்பட்டது)
5.	திவால் தொழில்முறையின் முதன்மை தீர்மான தொழில் முறையாளரின் பெயர் & பதிவு எண்.	**அமீர் ஹம்சா அலி அப்பாஸ் ராவுத்தர் Reg. No. IBBI/IPA-001/IP-P01727/2019-2020/12620**
6.	வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தீர்மான தொழில் முறையாளரின் முகவரி மற்றும் மின் அஞ்சல்	R094, SBIOA யூனிட்டி என்கிளேவ், மாம்பாக்கம் அஞ்சல், சென்னை – 600 127, தமிழ்நாடு amierhamsa@gmail.com
7.	தீர்மான தொழில் முறையாளருக்கு கோரிக்கைகளை சமர்ப்பிக்க உபயோகிக்கும் கடித முகவரி மற்றும் மின்னஞ்சல்	**அமீர் ஹம்சா அலி அப்பாஸ் ராவுத்தர் VCAJ & Associates LLP, Chartered Accountants, வில்லிங்டன் கிரெசன்ட், 4வது தளம், எண்.6/2, S S பத்ரிநாத் ரோடு (பைகிராப்ட்ஸ் கார்டன் ரோடு) நுங்கம்பாக்கம் அஞ்சல், சென்னை–** 600 006 email: amierhamsa@gmail.com (M) 80085 64555 | 99308 46070
8.	கோரிக்கைகளை சமர்ப்பிக்க இறுதி தேதி	**18.01.2025 (சனிக்கிழமை)**
9.	பொருத்தமான படிவம் கிடைக்கும் இடம்	**Form B (Claim with Proof By a Creditor) is available at: https://www.ibbi.gov.in or by mail with the request: amierhamsa@gmail.com**

மாண்புமிகு தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு, நொடிந்த நிலை மற்றும் திவால் நிலை சட்டம் 2016, பிரிவு 102-ன் கீழ் **(Mrs.S.கமலம்)** 20.12.2024 அன்று திவால் தீர்வு நடைமுறைகளை துவக்க உத்தரவிட்டுள்ளது என இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

எனவே **Mrs.S.கமலம்**-க்கு பாத்தியதாரர்கள் தங்களது கோரிக்கைகளுக்கான ஆதாரங்களை **"படிவம் B" 18.01.2025 அன்று அல்லது அதற்கு முன்னர் (28.12.2024-இருந்து 21 நாட்கள்)** பரிந்துரைக்கப்பட்ட படிவத்தினை தீர்மான தொழில் முறையாளரிடம் மின்னனு முறையில் (மின்னஞ்சல்) அல்லது பதிவு அஞ்சல், துரித அஞ்சல் அல்லது கூரியர் மூலம் மட்டுமே சமர்ப்பிக்குமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். படிவம் B- உரிமைகோரல் விண்ணப்பத்திற்கான ஆதாரத்தில் தயவு செய்து உங்கள் மின்னஞ்சல் ஐடி, மொபைல் எண் மற்றும் பிரதிநிதி/விண்ணப்பதாரரின் பெயரை தவறாமல் வழங்கவும்.

குறிப்பு: பொய்யான அல்லது திசைத்திருப்ப கூடிய கோரிக்கைக்கான ஆதாரங்களை சமர்ப்பித்தால் அது அபராதத்திற்கு வழிவகுக்கும்.

அமீர் ஹம்சா அலி அப்பாஸ் ராவுத்தர்
(தீர்மான தொழில் முறையாளர்)
IP Reg. No. IBBI/IPA-001/IP-P01727/2019-2020/12620

தேதி :28.12.2024
இடம் : சென்னை

இ-ஏல விற்பனை அறிவிப்பு
ஜுகு ஆர்கெம் பிரைவேட் லிமிடெட் (கலைப்பில் உள்ளது)
(CIN: U15141TN1997PTC070777)

திவால் மற்றும் திவால் குறியீடு, 2016ன் கீழ் இ–ஏலம்

இந்திய திவால் மற்றும் திவால்நிலை வாரியத்தின் (கலைப்பு செயல்முறை) விதிகள், 2016ன் அட்டவணை I மற்றும் ஐபிபிஐ (கலைப்பு செயல்முறை) விதிகள் 2016ன் விதி 32(b)ன்படி https://bankauctions.in இ–ஏல தளம் மூலம் கார்ப்பரேட் கடனாளியின் சொத்துக்களை **தற்போதுள்ள நிலையில் அல்லது சரிவு விற்பனை அடிப்படையில்** விற்க ஜுகு ஆர்கெம் பிரைவேட் லிமிடெட் (கலைப்பில் உள்ளது) ("கார்ப்பரேட் கடனாளி") திட்டமிட்டுள்ளது என்பது பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. ஐதராபாத்தில் உள்ள ஆன்லைன் இ–ஏல சேவை வழங்குநர் M/s 4 குளோசார் மூலம் ஏலம் நடைபெறும். இ–ஏல இணையதள இணைப்பு: https://bankauctions.in

வ.எண்	விவரங்கள்	விவரங்கள்
1	வருங்கால ஏலதாரர் தகுதி ஆவணங்களை சமர்ப்பிக்க கடைசி தேதி (பொது அறிவிப்பு வெளியிடப்பட்டதிலிருந்து குறைந்தது பதினான்கு நாட்கள்)	11.01.2025 அன்று மாலை 4.00 மணி வரை
2	இ–ஏல தேதி மற்றும் நேரம்	23.01.2025 பிளாக் ஏ மற்றும் பிளாக் பி– காலை 10:30 முதல் மதியம் 12:30 வரை (ஒவ்வொன்றும் 5 நிமிடங்கள் வரம்பற்ற நீட்டிப்பு)

பிளாக் எண்	சொத்துக்களின் விவரம்	குறைந்த பட்ச விலை	முன்வைப்புத் தொகை	ஏல அதிகரிப்பு மதிப்பு
ஏ	செங்கல்பட்டு மாவட்டம், பின்கோடு 603 314. மதுராந்தகம் தாலுக்கா, வேடந்தாங்கல் சாலை, புழுதிவாக்கம் கிராமத்தில் உள்ள ஆலை மற்றும் இயந்திரம் (பயன்பாடுகள்) மொத்த அடிப்படையில் விற்பனை, ★	ரூ. 26 லட்சம்	ரூ.2.60 லட்சம் 21 ஜனவரி, 2025 மாலை 5.00 மணிக்குள்	ரூ. 1 லட்சம்
பி	செங்கல்பட்டு மாவட்டம், பின்கோடு 603 314. மதுராந்தகம் தாலுக்கா, வேடந்தாங்கல் சாலை, புழுதிவாக்கம் கிராமத்தில் உள்ள ஆலை மற்றும் இயந்திரம் மற்றும் இதர ஆஸ்திகள் மொத்த அடிப்படையில் விற்பனை, ★	ரூ. 53 லட்சம்	ரூ.5.30 லட்சம் 21 ஜனவரி, 2025 மாலை 5.00 மணிக்குள்	ரூ. 1 லட்சம்

★ கலைப்பாளரால் சொத்து சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது
1. அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர் மூலம் எந்தவிதமான உத்தரவாதங்கள் மற்றும் இழப்பீடுகள் இல்லாமல் விற்பனை செய்யப்படுவதால், "எங்கே எப்படி எவ்வாறு இருந்தாலும் என்ற அடிப்படை மற்றும் ஆதாரம் இல்லாமல்" இ–ஏலம் நடத்தப்படும்.
2. ஏலதாரர்கள் குறைந்தபட்ச விலைக்குக் குறைவான மதிப்பில் ஏலம் விட முடியாது.
3. இ–ஏல சேவை வழங்குநர் M/s 4 குளோசார்: https://bankauctions.in; இ–ஏல ஏஜென்சி M/s 4 குளோசார் சார்பாக தொடர்பு கொள்ள வேண்டிய நபர் திரு.எம்.தினேஷ், dinesh@bankauctions.in & info@bankauctions.in, மொபைல் எண்: +91 8142000735&8142000066. இ–ஏல செயல்முறைஆவணத்தில் பரிந்துரைக்கப்பட்டவை உட்பட சம்பந்தப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஆர்வமுள்ள ஏலதாரர்கள் கட்டாயமாக படித்து ஒப்புக்கொண்ட பிறகு பங்கேற்க வேண்டும்.
4. எந்தவொரு அல்லது அனைத்து ஆபர்களையும் ஏற்க அல்லது நிராகரிக்க அல்லது இ–ஏலத்தை ஒத்திவைக்க/ ஒத்திவைக்க / ரத்து செய்ய அல்லது எந்தவொரு காரணத்தையும் குறிப்பிடாமல் எந்த நிலையிலும் ஏலத்தில் இருந்து அதன் சொத்துக்களை திரும்பப் பெறுவதற்கு கலைப்பாளருக்கு முழு உரிமை உண்டு.
5. குறியீடு பிரிவு 35ன் ஷரத்து (எப்) விதியின்படி, ஆர்வமுள்ள ஏலதாரர், குறியீடு பிரிவு 29ஏ–ல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி அளவுகோல்களை பூர்த்தி செய்யத் தவறினால் (நேரத்திற்கு ஏற்ப திருத்தப்பட்டபடி) ஏலத்தைச் சமர்ப்பிக்கத் தகுதியற்றவர் ஆவார்.
6. மேலே உள்ள ஏலங்களில் பங்கேற்பதற்கான விவரங்கள், வடிவங்கள் மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://bankauctions.inல் கிடைக்கும் மின் ஏலச் செயல்முறை ஆவணத்தைப் பார்க்கவும்.

ஒப்பம்/–
சந்திரசேகர் சாகுதூர்
M/s ஜுகு ஆர்கெம் பிரைவேட் லிமிடெட் விஷயத்தில் கலைப்பாளர்
IBBI Regn. No: IBBI/IPA-001/IP-P00960/2017-18/11581
மின்னஞ்சல்: liquidatorjopl@gmail.com,
நாள்: 28 டிசம்பர், 2024 F4& F5, முதல் தளம், எண்.333/17, எஸ்விபி சல்மா ஆர்கேட் வளாகம்,
இடம்: சென்னை கோடம்பாக்கம், சென்னை 600 024, தமிழ்நாடு, தொடர்பு எண் – 9500159376

பொது அறிவிப்பு

நொடிந்த நிலை மற்றும் திவால் நிலை சட்டம் 2016, பிரிவு 102-ன் கீழ்
மற்றும் மாண்புமிகு NCLT, சென்னை பெஞ்ச் II இன் வழிகாட்டுதலின் கீழ்

"Mr.S.சுதாகர் கடனீந்தோரின் கவனத்திற்கு"
[அக்வா டிசைன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்-ன் தனிப்பட்ட ஜாமீன்தாரர்)
(CIN : U41000TN2002PTC050091)]

வ. எண்.	முக்கிய விபரங்கள்	
1.	கடன் பெற்ற தனிப்பட்ட ஜாமீன்தாரர் பெயர்	Mr.S.சுதாகர்
2.	தனிப்பட்ட ஜாமீன்தாரரின் முகவரி	C/o Shri. பிரபாகரன், எண்.13/1A, ஜெயந்தி நகர் விரிவு, கொளத்தூர் அஞ்சல், சென்னை-600 099, தமிழ்நாடு
3.	விண்ணப்பத்தினை ஒப்புக்கொள்ளும் உத்தரவின் விவரங்கள்	ஆர்டர் எண். CP (IB)/186/2021 26.12.2024 அன்று பாரத ஸ்டேட் பாங்கு Vs Mr.S.சுதாகர் U/s 95 (1) இன் I & B குறியீடு, 2016-ன் கீழ் வழங்கப்பட்டது மற்றும் ஆர்டர் தேதி 20.12.2024
4.	திவால் தீர்வு நடைமுறை தொடங்கும் தேதி	20.12.2024 (26.12.2024 அன்று பெறப்பட்டது)
5.	திவால் தொழில்முறையின் முதன்மை தீர்மான தொழில் முறையாளரின் பெயர் & பதிவு எண்.	**அமீர் ஹம்சா அலி அப்பாஸ் ராவுத்தர் Reg. No. IBBI/IPA-001/IP-P01727/2019-2020/12620**
6.	வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தீர்மான தொழில் முறையாளரின் முகவரி மற்றும் மின் அஞ்சல்	R094, SBIOA யூனிட்டி என்கிளேவ், மாம்பாக்கம் அஞ்சல், சென்னை – 600 127, தமிழ்நாடு amierhamsa@gmail.com
7.	தீர்மான தொழில் முறையாளருக்கு கோரிக்கைகளை சமர்ப்பிக்க உபயோகிக்கும் கடித முகவரி மற்றும் மின்னஞ்சல்	**அமீர் ஹம்சா அலி அப்பாஸ் ராவுத்தர் VCAJ & Associates LLP, Chartered Accountants, வில்லிங்டன் கிரெசன்ட், 4வது தளம், எண்.6/2, S S பத்ரிநாத் ரோடு (பைகிராப்ட்ஸ் கார்டன் ரோடு) நுங்கம்பாக்கம் அஞ்சல், சென்னை–** 600 006 email: amierhamsa@gmail.com (M) 80085 64555 | 99308 46070
8.	கோரிக்கைகளை சமர்ப்பிக்க இறுதி தேதி	**18.01.2025 (சனிக்கிழமை)**
9.	பொருத்தமான படிவம் கிடைக்கும் இடம்	**Form B (Claim with Proof By a Creditor) is available at: https://www.ibbi.gov.in or by mail with the request: amierhamsa@gmail.com**

மாண்புமிகு தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு, நொடிந்த நிலை மற்றும் திவால் நிலை சட்டம் 2016, பிரிவு 102-ன் கீழ் **(Mr.S.சுதாகர்)** 20.12.2024 அன்று திவால் தீர்வு நடைமுறைகளை துவக்க உத்தரவிட்டுள்ளது என இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

எனவே **Mr.S.சுதாகர்**-க்கு பாத்தியதாரர்கள் தங்களது கோரிக்கைகளுக்கான ஆதாரங்களை **"படிவம் B" 18.01.2025 அன்று அல்லது அதற்கு முன்னர் (28.12.2024-இருந்து 21 நாட்கள்)** பரிந்துரைக்கப்பட்ட படிவத்தினை தீர்மான தொழில் முறையாளரிடம் மின்னனு முறையில் (மின்னஞ்சல்) அல்லது பதிவு அஞ்சல், துரித அஞ்சல் அல்லது கூரியர் மூலம் மட்டுமே சமர்ப்